


கரூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை கலையரங்கத்தில் நடைபெற்ற முதல் பட்டமளிப்பு விழாவில் மாணவ, மாணவியருக்கு மருத்துவப் பட்டங்களை மருத்துவம், மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா சுப்பிரமணியன், கரூர் மாவட்ட கழக செயலாளர் வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ., வழங்கினர். கரூர் மாவட்ட கலெக்டர் மீ.தங்கவேல், கரூர் தொகுதி எம்.பி.செ.ஜோதிமணி, எம்.எல்.ஏ.க்கள் இரா.மாணிக்கம், ஆர்.இளங்கோ, க.சிவகாமசுந்தரி, மருத்துவக் கல்லூரி முதல்வர் டாக்டர் லோகநாயகி, மேயர் கவிதா கணேசன், துணை மேயர் தாரணி சரவணன் ஆகியோர் அருகில் உள்ளனர்.



கோவை அவினாசி சாலையில் நடைபெற்று வரும் உயர்மட்ட மேம்பாலப் பணிகளை நெடுஞ்சாலைத்துறை மற்றும் பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் பவன்குமார் க.கிரியப்பனவர், மாநகர் மாவட்டச் செயலாளர், சிங்காநல்லூர் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் நா.கார்த்திக், கோவை மாநகராட்சி ஆணையர் சிவகுரு பிரபாகரன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஏர்போர்ட் ராஜேந்திரன் உள்பட கழக நிர்வாகிகள், அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

### தற்போது பரவும் கொரோனா வீரியம் குறைவாக உள்ளது!

# புதுக்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரி பட்டமளிப்பு விழா!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் பங்கேற்றார்!

புதுக்கோட்டை, ஜூன் 12 -

புதுக்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் நடைபெற்ற மூன்றாவது பட்டமளிப்பு விழாவில் கலந்து கொண்டு மாணவர்களுக்கு பட்டங்களை வழங்கிய தமிழ்நாடு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா. சுப்ரமணியன் பேட்டி வருமாறு:

புதுக்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் நடைபெற்ற மூன்றாவது பட்டமளிப்பு விழாவில் கலந்து கொண்ட தமிழ்நாடு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா. சுப்ரமணியன் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் கூறுகையில்:

ஆரம்ப சுகாதார நிலையங்களை பொறுத்தவரை 2026ல் உருவாகக்கூடிய காலிப்பணியிடங்களை மனதில் வைத்து தான் கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னால் 2642 பணியிடங்கள் நிரப்பப்பட்டது.

ஒவ்வொரு ஆண்டும் 1250ல் இருந்து 1300 காலிப் பணியிடங்கள் உருவாகிறது. இதில் முதுநிலை கல்வி முடித்தவர்கள் டி.எம்.எஸ். டி.எம்.எப்.க்கும் மாற்றி அனுப்பப்படுகின்றனர். அவ்வாறு அனுப்பப்பட்ட பிறகு அந்த இடங்களும் காலியாக உருவாகிறது. எவ்வளவு பணிகள் காலியாக இருக்கிறதோ அதனை கணக்கில் கொண்டு மருத்துவ தேர்வாளர்கள் பணியாணயத்தின் மூலம் தேர்வுகள் நடத்தப்பட்டு பணியிடங்கள் நிரப்பப்படுகிறது.

தற்போது ஆரம்ப சுகாதார நிலையங்களை பொருத்தவரை போதுமான மருத்துவர்கள் இருக்கின்றனர். அதேபோல் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை அரசு தலைமை மருத்துவமனைகளில் இருக்கக்கூடிய சிறப்பு மருத்துவர்கள் காலி பணியிடங்களை ஆரம்ப சுகாதார நிலையத்தில் பணிபுரிந்து முதுநிலை படித்து முடித்தவர்களை அந்தப் பணிக்கு மாற்றம் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

**காலிப் பணியிடங்கள் இல்லாத நிலை!**

காலி பணியிடங்கள் இல்லாத நிலை என்பது கடந்த ஆறு மாத காலமாக நிலவி வருகிறது. 2642 பணியிடங்களுக்கு பணியானை கொடுத்தும் மூன்று மாத காலமாக அந்த பணியில் சேராமல் இருந்த 27 பேருக்கு சோக்காஸ் நோட்டீஸ் வழங்கப்பட்டுள்ளது. இன்னும் 248 நபர்களுக்கு வருகின்ற ஜூலை மாதத்துடன் பணியில் சேர்வதற்கான காலம் முடிவடை கிறது. அவர்களும் சேரவில்லை என்றால் அவர்கள் பணி ஆணையம் ரத்து செய்துவிட்டு ஏற்கனவே தேர்வு எழுதி அதிக மதிப்பெண் பெற்ற அதே வகுப்பைச் சேர்ந்தவர்களை தேர்ந்தெடுத்து அந்த பணி வழங்கப்படும்.

கடந்த நான்கு ஆண்டுகளில் எம்ஆர்பி டி.என்.பி. எஸ்.சி. என்.எச்.எம். போன்ற அமைப்புகள் சார்பில் 29,771 மருத்துவ காலி பணியிடங்கள் நிரப்ப ப்பட்டுள்ளது.

மருத்துவர்கள் செவிலியர்கள் மற்றும் மருத்துவம் சார்ந்த களப்பணியாளர்களை பொருத்தவரை 43155 பேருக்கு வெளிப்படை தன்மையோடு கலந்தாய்வு நடத்தி அவர்கள் விரும்புகின்ற இடங்களுக்கு பணி மாறுதல் வழங்கப்பட்டுள்ளது.

உலகம் முழுவதும் கொரோனா இருக்கிறது. தற்போதுள்ள சூழ்நிலையில் பெரிய பதட்டத்தை உருவாக்ககூடாது. கொரோனாவை பொருத்தவரை 2019 இறுதியில் இருந்து ஆல்பா பீட்டா டெல்டா டெல்டா பிளஸ் காமா காமா பிளஸ் ஒமேக்ரான் போன்ற தொடர் உருமாற்றங்களை பெற்று வந்தது. தற்போது வந்துள்ள கொரோனா பாதிப்பை பொறுத்தவரை 19 மாதிரிகள் பூனாவில் இருக்கக்கூடிய ஆய்வகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டு பரிசோதனை செய்ததில் தற்போது பரவும் கொரோனா ஒமேக்ரானில் ஒரு வகை .

இந்த வைரஸ் வீரியமற்ற வைரஸ். இந்த வைரஸ் பாதிப்புக்குள்ளானவர்களுக்கு மூன்று நாட்களில் இருந்து தொண்டை வலி சளி காய்ச்சல் உள்ளிட்ட தொந்தரவுகள் இருக்கும். பொதுமக்களுக்கு ஒட்டு மொத்தமாக ஒன்றிய அரசின் சுகாதாரத் துறை அறிவுறுத்தலின்படி பொது மக்களுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. இது போன்ற தீராத காய்ச்சல் நீண்ட நாள் தொண்டை வலி சளி சரியாகாமல் இருந்தால் அரசு மருத்துவமனைக்கு வர வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்படுகிறது.

பொதுமக்களுக்கு பொதுவான அறிவுறுத்தலோ விதியோ சட்டமோ கட்டாயமா எதுவும் இல்லை. அதே நேரத்தில் நோய் எதிர்ப்பு சக்தி குறைவாக உள்ளவர்கள் இணை நோய் பாதிப்பு இருப்பவர்கள் கர்ப்பிணி தாய்மார்கள் வயது முதிர்ந்தவர்கள் பொது இடத்திற்கு செல்லும் பொழுது முக கவசம் அணிந்து கொள்வது நல்லது என்று சொல்லப்பட்டுள்ளது. முக கவசம் அணிவது கட்டாயம் இல்லை ஆனால் அது நல்லது.

இந்திய அளவில் கொரோனாவால் தற்பொழுது எந்த உயிரிழப்பும் இல்லை. கேரளாவில் நம்மை விட நாள் ஒன்றுக்கு பத்து மடங்கு அதிகமாக கொரோனா பரவி வருகிறது. அங்கும் கொரோனா உயிரிழப்பு இல்லை.

ஏற்கனவே ஏற்பட்ட ஒரு இரண்டு உயிரிழப்புகளை பொறுத்தவரை ஏற்கனவே இதயம் சிறுநீரகம் பாதிப்பு போன்ற இணை நோய்களோடு எந்த மருத்துவமனை தனியார் மருத்துவமனை உட்பட எங்கு அனுமதித்தாலும் வாழ்வின் இறுதி கட்டம் என்று சொல்லும் அளவிற்கு பாதிப்பு ஏற்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கும் பொழுது கொரோனா உள்ளிட்ட 12 13 வகையான பரிசோதனைகளை மேற்கொள்கிறார்கள். அதில் ஒன்று இரண்டு நபர்களுக்கு கொரோனா பாதிப்பும் இருக்கிறது. அவர்கள் உயிரிழப்பதை கொரோனா உயிரிழப்பாக கருத முடியாது.

அண்டை மாநிலங்களில் இருந்து வருபவர்களை கண்காணித்து பரிசோதனை செய்ய எந்த அவசியமும் இல்லை கண்காணித்து பரிசோதனை செய்ய வேண்டும் என்ற விதிமுறைகளையும் ஒன்றிய சுகாதாரத் துறை விதிக்கவில்லை.

எம்.ஆர்.பி.யில் இருக்கக்கூடிய செவிலியர்களுக்கு நிரந்தரம் அற்ற முறையில் ஒப்பந்த முறையில் பணியாற்றி கொண்டிருப்பவர்களை படிப்படியாக பணி நிரந்தரம் செய்து தொகுப்பூதியத்தில் இருப்பவர்களை நிரந்தரம் செய்து ஒப்பந்தம் அடிப்படையில் இருப்பவர்களை தொகுப்பு ஊதியத்திற்கு எடுத்து வருவது என தொடர்ச்சியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. தற்போது அதில் காலி பணியிடங்கள் 200 300 தான் இருக்கும் அந்த காலி பணியிடங்களின் பட்டியலையும் பெற்று அந்தப் பணியிடங்கள் நிரப்பப்படும். ஊதியம் இல்லாமல் எந்த செவிலியரும் தமிழ்நாடு மக்கள் நல்வாழ்வு துறையில் இல்லை.

**கட்டண வார்டு திறப்பு!**

அனைத்து மருத்துவமனைகளிலும் கட்டண வார்டு திறந்ததன் விளைவு தான் அனைத்து தரப்பினரும் அரசு மருத்துவமனைக்கு வருகின்றனர். இதன் நோக்கமே அரசு மருத்துவ சேவையை அனைத்து தரப்பு மக்களும் பயன்படுத்தி கொள்ள வேண்டும் என்பதுதான். தனியார் மருத்துவமனைகளை நாடி போவதை தவறு என்று கூறவில்லை ஆனால் அரசு மருத்துவமனையை முழுமையாக பயன்படுத்த வேண்டும் என்பதற்காகத் தான் இது போன்ற கட்டணவார்டு அமைக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே வந்த பயனாளிகளின் எண்ணிக்கையை விட தற்பொழுது அரசு மருத்துவமனைக்கு வருபவர்கள் இரண்டு மூன்று மடங்கு எண்ணிக்கை அதிகரித்துள்ளது. மருத்துவ கட்டடங்கள் மேம்படுத்தப்பட்டு மருத்துவர்களின் சேவை உணர்வு அதிகப்படுத்துவது உள்ளிட்ட புதிய புதிய சிறப்பு திட்டங்களை கொண்டு வருவதன் மூலம் மருத்துவமனைக்கு வருபவர்களின் எண்ணிக்கை பெருகி வருகிறது. கட்டண வார்டுகள் மூலம் ஏற்றத்தாழ்வுகள் ஏற்படாது சாதாரண வார்டுகளில் என்ன மருத்துவம் என்ன மருந்து மாத்திரைகள் கிடைக்கிறதோ அதே மருந்து மாத்திரைகள் தான் அந்த வார்டில் உள்ளவர்களுக்கும் கிடைக்கும்.

பாரா மெடிக்கல் தேர்ந்தெடுக்கும் மாணவர்கள் அவர்கள் தான் கல்லூரிகளை தேர்ந்தெடுக்கிறார்கள். எது போலி எது சரியான கல்லூரி என்பதை கண்டுபிடித்து சேர வேண்டியது மாணவர்கள் கையிலும் பெற்றோர்கள் கையிலும் தான் இருக்கிறது. தமிழ்நாட்டில் மருத்துவத் துறையில் போலியான கல்லூரிகள் நடத்துகிறார்கள் என்றால் அவர்களை கண்டுபிடித்து உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும். பாரா மெடிக்கலில் செய்பவர்களுக்கு முன் கூட்டியே மருத்துவ கவுன்சில் நடத்த முடியாது. தேசிய மருத்துவ ஆணையம் என்ன விதிமுறைகளை கொடுக்கிறார்களோ அதன்படி படிப்படியாகத்தான் நடத்த முடியும்.

கர்ப்பிணி தாய்மார்களுக்கு கருவில் இருப்பது ஆணா பெண்ணா என்று எங்காவது உள்ள ஸ்கேன் சென்டரில் தெரிவிக்கிறார்கள் என்று தகவல் தெரிந்தால் உடனடியாக புகார் தெரிவியுங்கள் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் கூறினார்.

### கிரிக்கெட் வரலாற்றில் எம்.எஸ். தோனியின் பயணம்

# பொன்னெழுத்துகளால் பொறிக்கப்பட்டுள்ளது!

## ‘ஹால் ஆப் ஃபேம்’ வரிசையில் சேர்க்கப்பட்டதற்காக – முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!

**சென்னை, ஜூன் 12 -**

**கிரிக்கெட் வரலாற்றில் எம்.எஸ். தோனியின் பயணம் பொன்னெழுத்துக்களால் தற்போது பொறிக்கப்பட்டுள்ளது என்று அவர் ‘ஹால் ஆப் ஃபேம் வரிசையில் சேர்க்கப்பட்டதற்காக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வாழ்த்து தெரிவிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.**

ஐ.சி.சி.யின் பெருமைமிகு ‘ஹால் ஆஃப் ஃபேம்’ வரிசையில் சேர்க்கப்பட்டதற்காக மகேந்திர சிங் தோனி அவர்களுக்கு வாழ்த்துத் தெரிவித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-




ஐ.சி.சி.யின் பெருமைமிகு ‘ஹால் ஆஃப் ஃபேம்’ வரிசையில் சேர்க்கப்பட்டதற்காக மகேந்திர சிங் தோனி அவர்களுக்கு என் வாழ்த்துகள்!

ஒருநாள் போட்டிகளில் அதிக எண்ணிக்கையில் இந்தியாவுக்குத் தலைமை தாங்கியது தொடங்கி, அதிக ஸ்டம்பிங் செய்தவர் என்ற சாதனை படைத்து, அனைத்து ஐ.சி.சி. கோப்பைகளையும் வென்ற ஒரே கேப்டன் என்பது முதல் சென்னை அணியை 5 முறை ஐ.பி.எல். கோப்பையையும், இருமுறை சாம்பியன்ஸ் லீக் தொடரிலும் வெற்றிபெறச் செய்தது வரை நீங்கள் உயர்சிறப்பான கிரிக்கெட் மரபைக் கட்டியெழுப்பியுள்ளீர்கள்.

உங்களின் நிதானத்தால் தலைமைத்துவத்தின் வரையறையையே மாற்றியமைத்தீர்கள்! விக்கெட்கீப்பிங் என்பதை ஒரு கலைநேர்த்தியாக மாற்றிக் காட்டினீர்கள்! ஒரு தலைமுறையையே உங்களது தெளிவாலும் உறுதியாலும் ஊக்குவித்துள்ளீர்கள்.

உங்களது பயணம் கிரிக்கெட் வரலாற்றில் தற்போது பொன்னெழுத்துகளால் பொறிக்கப்பட்டுள்ளது. எப்போதுமே ‘Thala For a Reason’ என்ற புகமுரை ஓயாது;

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

### தென்பாண்டிச் சிங்கம்

# வாளுக்கு வேலி அம்பலம் பிறந்த நாள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளத்தில் பாராட்டு!

**சென்னை, ஜூன் 12 -**

**‘தென்பாண்டிச் சிங்கம்’ வாளுக்கு வேலி அம்பலம் அவர்களின் பிறந்த நாளையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-**

விடுதலை வீரர்களைப் போற்றி வணங்கும் அரசாக ‘தென்பாண்டிச் சிங்கம்’ வாளுக்கு வேலி அம்பலம் அவர்களின் பிறந்தநாளை அரசு விழாவாக அறிவித்துக் கொண்டாடி வருவதுடன், இந்த ஆண்டு ஜனவரி மாதம்தான் சிவகங்கை மாவட்டம் நகரம்பட்டியில் அவரது முழுவுருவ வெண்கலச் சிலையினைத் திறந்து வைத்தேன்!

வீரத்தின் விளைநிலமான சிவகங்கைச் சீமையின் மைந்தனாக அந்நிய ஏகாதிபத்தியத்தை எதிர்த்து, வீரமங்கை வேலுநாச்சியார் மற்றும் மானம்காத்த மருதிருவரோடு இணைந்து போரிட்ட வாளுக்கு வேலி அம்பலம் அவர்களின் பிறந்தநாளில், அவருக்கு என் வீரவணக்கம்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கே. வாசுதேவன்

ஜூன் 12 (2020)



தனது இளமைப் பருவம் முதலே கழகக் கொள்கையால் ஈர்க்கப்பட்டு தொடர்ந்து நாற்பது ஆண்டுகள் கிளைச் செயலாளராகவும், அண்ணாகிராம ஒன்றிய துணைச் செயலாளர், மாவட்ட பிரதிநிதி, ஒன்றிய பொருளாளர் என கழகத்தில் பொறுப்புகள் வகித்தவர்.

ஊராட்சி மன்றத் தலைவர், ஆடு வளர்ப்போர் கூட்டுறவு சங்க தலைவர் அருங்குனம் கூட்டுறவு சங்க இயக்குநர் என பதவி வகித்தவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### துரை சாம்பசிவம்

ஜூன் 12 (2016)



வேலூர் மாவட்டத்தில், கழகத்தின் தொடக்கக் காலத்திலேயே ஆசிரியர் பணியை உதறிவிட்டு கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டவர்.

1957–ல் பேரறிஞர் அண்ணாவால் அடையாளம் காணப்பட்டு குடியாத்தம் சட்டமன்றத் தொகுதி வேட்பாளராக அறிவிக்கப்பட்டவர்.

கே.வி.குப்பம் ஒன்றியச் செயலாளராக தொடர்ந்து 15 ஆண்டுகள் பொறுப்பு வகித்தவர்.

வேலூர் மாவட்ட ஊராட்சித் தலைவராகவும் – கீ.வ.குப்பம் ஒன்றிய பெருந்தலைவராகவுமம் – முருக்கம்பட்டு ஊராட்சி மன்றத் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர். மிசா கைதியாகவும், அதற்கு முன்னர்1962–ல் விலைவாசி உயர்வு எதிர்ப்புப் போராட்டத்தில் கைதாகி, அறிஞர் அண்ணாவுடன் வேலூர் சிறையில் இருந்தபோது, அண்ணாவால் “தாடிக்காரர்’என அழைக்கப்பட்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**